மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தொழிற்சாலையினுடைய தலைமையகம் கல்கத்தாவில் இருக்கிறது. கடன் காரணமாக அதன் மீது வழக்குபோட்டு, அது லிக்வியூடேஷனில் இருந்து அங்கே கல்கத்தாவில் இருக்கிற தொழிலாளர்கள் தாங்களே நடத்த முன்வந்த காரணத்தாலே நீதிமன்றம் அவர்களை நடத்த அனுமதித்துள்ளது. அதைப்போல சென்னையிலே இருக்கிற தொழிலாளர்கள் தாங்களே நடத்துகிறோம் அதற்கு அரசாங்கத்தினுடைய உதவி வேண்டும் என்று அரசிற்கு மனு கொடுத்திருக்கிறார்கள். அதன் மீது இன்றைக்கு தொழிற்துறை பரிசீலனை செய்து 27 லட்சம் ரூபாய் முதலீட்டில் அவர்களுக்கு உதவி செய்ய அரசு பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தொழிற்சாலையை அரசு ஏற்று நடத்த விரும்புவதால் அந்த தொழிற்சாலையை அரசு ஏற்று நடத்தும் போது அதிக அளவில் தொழிலாளர்களை சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ? அந்தத் தொழிற்சாலையின் மற்ற விவரங்களைக் குறித்தும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசே இந்த தொழிற்சாலையை ஏற்று நடத்தாது. அங்கே இருக்கிற 70-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கொண்ட ஒரு இன்டஸ்ரியல் கோவாப்பரேட்டிவ் சொசைட்டியாக உருவாக்கி அவர்களுக்கு 27 லட்சம் ரூபாய் அரசு சார்பில் கொடுத்து, பிறகு வங்கிகளின் வாயிலாக பிற நிதியாதாரங்களை கொடுத்து தொழிலாளர்களே நடத்துகிற தொழிற்சாலையாகத் தான் இந்தத் தொழிற்சாலை இருக்கும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அரசு சிட் பண்டு துவக்கும் திட்டம்.

*வினா எண். 479—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1982 ஆம் வருடம் முதல் அரசு சிட்பண்டு துவக்குவது பற்றி தமிழக அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன ?

(இ) பலன் என்ன?

1982 மார்ச் 16]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) ஆம்.

(ஆ) அரசு சரார்பில் சீட்டுக்கழகம் ஒன்று அமைப்பதற்கு கொள்கையளவில் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. இக்கழகத்தை சென்னை கம்பெனி பதிவாளரிடம் பதிவு செய்து கொண்டபின், பங்குதாரர்களிடமிருந்து பெறப்படும் தொகையினை சேர்த்து வரக்கூடிய மொத்த தொகையான ரூ. 10 இலட்சத்தை மூல தனமாகக் கொண்டு இச் சீட்டுக் கழகத்தின் தலைமை அலுவலகத்தை சென்னையிலும் சீட்டு நடத்தும் தொழில் மிகப் பிரபலமாக உள்ள வேறு இடங்களிலும் இக்கழகத்தின் கிளைகளை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

(இ) அரசுக்கு ஒவ்வொரு ஆண்டும் இதன் மூலம் கிடைக்கும் கணிசமான இலாபத்தைத் தவிர வேலை வாய்ப்பின்றி இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கும் இத்திட்டம் உதவும். இது மட்டுமின்றி சந்தாதாரர்கள் செலுத்தும் தொகை அரசு நடத்தும் சீட்டுக் கழகத்தில் பாதுகாப்பாக இருப்பதுடன் இக் கழகத்தின் மூலமாக கிடைக்கும் பங்கு மூலதனம் கமிஷன் மற்றும் வட்டிப் பணத்தையும் கொண்டு பல முன்னேற்ற திட்டங்களை வகுக்கவும் அரசிற்கு வாய்ப்பு ஏற்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி எ்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே தனியார்கள் பலர் சீட்டு கம்பெனிகள் நடத்தி இரவோடு இரவாக முடிவிட்டு ஓடி விட்டிருக்கிறார்கள். இந்த மாநிலத்திலிருந்து போய் இன்னொரு மாநிலத்தில் நடத்துகிறார்கள். தாம்பரத்திலே கூட இதுபோன்ற மோசடி சமீபத்திலே நடைபெற்றது. வேறு பல சீட்பண்டுகளைப் பொறுத்தவரையில் பணத்தை சேகரித்து பின்னால் ஒரு நல்ல நிலைக்கு வந்தவுடன் லிக்விடேட் பண்ணி மோசடிகள் எல்லாம் செய்கிறார்கள். இந்த நிலைமையில் மக்களுக்கு உத்தரவாதம் கொடுக்கிற முறையிலே அரசே விரைவில் இதை அமல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் அமல் படுத்தும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதர்சன் சிட்பண்ட், கருடா சிட்பண்ட் போன்ற சீட்டு கம்பெனிகளிலே ஏழை மக்களின் பணத்தை கபளீகரம் செய்கிற வகையிலே மோசடிகள் நடந்திருக்கிறதால் தேசியமயமாக்கப் பட்ட வங்கிகள் நடத்துவதாலும், அல்லது கோவாப்பரேட்டிவ் வங்கிகள் மூலமாக சீட்டு கம்பெனிகளை நடத்தினாலும் மக்களுக்கு பிரயோஜனமாக இருக்குமே; இதை அரசாங்கம் பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அரசு புதியதாக தொடங்க விருக்கிற முயற்சியே அந்த தீமைகளை களைய வேண்டும் என்பதற்காகத்தான்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீட்டு கம்பெனி பதிவாளரிடம் பதிவு செய்யப்பட்டது என்ற முத்திரையுடன் நடைபெறக் கூடிய தனியார் சிட்பண்ட் கம்பெனிகள் அடிக்கடி திவாலாகி சேமிக்கும் ஏழை மக்களுடைய பணம் மோசடி செய்யப்படுவதால் இதை தடுப்பதற்கும், அரசே உடனடியாக சீட்டு கம்பெனியை துவங்கு அதற்கும் முயற்சியை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவிலே நிச்சயமாக மேற்கொள்ளும்.

(முற்பகல் 9·10)

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, கருடா சிட் பண்ட்ஸ் மக்கள் பணத்தைப் பறித்துக் கொண்டு பறந்து விட்டது, இதுபோன்று பல சிட் கம்பெனிகள் பறந்து கொண்டிருக்கின்றன. கொள்கை அளவிலே சீட்டு நிறுவனம் ஆரம்பிக்கப்படுவதாக நீண்ட நெடுங் காலமாகச் சொல்லப்பட்டு வருகிறது. அது எந்த ஆண்டு ஆரம்பிக்கப்படும் ? அதனுடைய கிளைகள் எல்லா மாவட்டங்களிலும் துவக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : முதல் கட்டமாக சென்னை நகரைத் தலைநகராகக் கொண்டு 10 முக்கியமான நகரங்களிலே—குறிப்பாக சென்னையில் 2, வேலூர், கோயம் புத்தூர், சேலம், திருப்பூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, மதுரை, நாகர்கோவில் ஆகிய இடங்களில்—தொடங்கப்படும்.

இந்துக் கோவில்களை பராமரிக்க வாரியம் அமைத்தல்:—

*வினா எண். 480—திரு. இல. பலராமன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

இந்துக் கோவில்களை பராமரிக்க வாரியம் அமைக்க கோரி இந்து சமூகத்தினர் கோரிக்கைகள் ஏதும் வைத்துள்ளனரா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இல்லை.